1994 மார்ச் 22]

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சூளகிரி பகுதியிலே இயங்கக்கூடிய தனியார் கட்டிடத்திலே உள்ள அந்தப் பிற்பட்டோர் நல விடுதியிலே கழிப்பறையும் மற்றும் குளிக்கக்கூட வசதி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, ஒரு சிறப்புக் கவனத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே மிகப் பிற்பட்ட மாணவர்கள் படிக்கின்ற காரணத்தினாலே வரும் நிதியாண்டிலாவது இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள இந்தத் தனியார் விடுதிகளிலே இயங்குகின்ற இந்தக் கட்டிடங்கள் எல்லாம் அடிப்படை வசதிகளைப் பெற வேண்டுமென்பதற்காகத் தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதற்கு நிதியுதவி அளித்து இன்றைக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அடிப்படை வசதிகள் பல விடுதிகளிலே இன்றைக்கு முழுமையான அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த விடுதியிலே அடிப்படை வசதிகள் இன்னும் வேண்டுமென்றால்கூட அந்த பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அந்த நிதியை அளித்து அதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும். ஆனால் புதிய விடுதிகள் கட்டப்பட வேண்டுமென்றால், எதிர்காலத்திலே மாணவியர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். எதிர்காலத்திலே கட்டப்படுகின்ற விடுதிகள் மாணவியர்களுக்கு மட்டுமே முன்னுரிமை தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

80—

சுற்றுலாத் துறையினால் 1991--92-ல் கிடைத்த அந்நியச் செலாவணி

***10718*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991-92-ல் சுற்றுலாத் துறையினால் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு?

[*1994 மார்ச் 22*

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92-ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ. 6.66 இலட்சம் அந்நியச் செலாவணியினை ஈட்டியுள்ளது.

முற்பகல் 11.10

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியால்தான், சுற்றுலாத் துறை இலாபம் ஈட்டும் துறையாக மாறியுள்ளது என்பதை இப்பேரவைக்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுவும், புரட்சித் தலைவியின் ஆட்சியின்கீழ், இத்துறை இருந்தபோதுதான், முதன்முதலாக இச்சாதனை ஏற்பட்டுள்ளது என்பதையும், இப்பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டம்-ஒழுங்கு கெடாமல் உள்ளது என்பதை, எடுத்துக் கூறுகிறவகையில், மக்கள் சுதந்திரமாகச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டுள்ளனர். அதன்மூலமாக வருவாய் ஈட்டி, புரட்சியை ஏற்படுத்திய சுற்றுலாத் துறை, என்னென்ன திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்த உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், நமது அன்னை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், சுற்றுலாத் துறைக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து அளித்ததன் அடிப்படையில், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு ஆண்டுதோறும் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றனர். இதுபோன்று, பல்வேறு திட்டங்களை வகுத்து அளிக்கின்ற வகையில், சுற்றுலாத் துறை வளர்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து தனி வினா எழுப்புவார்களேயானால், விளக்கமாக பதில் அளிக்க முடியும் என்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி பயிலும் மாணவ, மாணவியர்க்கு பசிப் பிணியைப் போக்கிட, புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தை அமலாக்கியதுபோல, மாணவ, மாணவியரின் அறிவை வளர்த்திடும் வகையில், புரட்சித் தலைவி அரசு, கல்விச் சுற்றுலா எல்லா பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆரம்பிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்புவார்களேயானால், மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்கமாகப் பதில் அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.